முக்கிய வார்த்தைகள்:
*சகித்துக் கொள்வது / பலமான சோதனை*
*அசிங்கம் / வெறுப்பு*
*நல்லது*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**11 செப்டம்பர் 2026 / 29 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1448**

**<u>இறைத்தூதுவத்துவ வழிகாட்டுதல் : சகிப்புத்தன்மை, ஆதரவு வைத்தல், புதுப்பித்தல்</u>**

**إِنَّ الْحَمْدَ لِلّهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيل: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற் றுங்கள்; அல்லாஹ் விலக்கிய விஷயங்களிலிருந்து விலகி இருங்கள்; ஒவ்வொரு **சோதனையையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றலை** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

மக்கா நகரத்தில், இறைத்தூதுதர் [ஸல்] அவர்களின் இறைத்தூதுவத்துப் பணியின் தொடக்கத்தில், அக்காலச் சமூகம் சிலைகளை வணங்குவது, அடக்குமுறை, ஊழல், சீர்கேடு போன்றவைகளுடன் நம்பிக்கை மற்றும் சமூக வாழ்க்கைத் தொடர்பான பிரச்சனைகளில் மூழ்கி இருந்தது.

அந்த "ஜாஹிலிய்யத்" அதாவது, அறியாமை எனும் இருளின் நடுவே இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கருணையுடன் தோன்றி, ஏகத்துவம், **நன்மை** செய்தல் மற்றும் நீதி, நேர்மையின் பால் மக்களுக்கு அழைப்பு விடுத்து, மனிதகுலத்தை இழிவின் ஆழத்திலிருந்து மேன்மையின் உயரத்திற்கு உயர்த்தினார்கள்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், ஒரு உன்னதமான மனிதராக அறியப்பட்ட போதிலும், மனதை மிகவும் நொறுக்கும் கொடுமைகளை அடிக்கடி அவர்கள் எதிர்கொண்டு வந்தார்கள். இறையில்லமாகிய க.்பத்துல்லாஹ் வின் முன்பாக அவர்கள் தொழுது கொண்டிருந்த போது அவமானப் படுத்தப்பட்டார்கள். அவர்கள் அல்லாஹ்வுக்கு "சஜ்தா" [சாஷ்டாங்கம்] செய்து கொண்டிருந்த போது, அவர்கள் மீது அழுக்குகளும் அசுத்தங்களும் வீசப்பட்டன. அவர்கள் தனது கழுத்தில் தனது துண்டைப் போட்டிருந்தார்கள்; அதன் மூலம் அவர்களின் கழுத்தை நெரித்து அவர்களைக் கொல்வதற்குக் கூட மக்கா நகர மக்கள் துணிந்து விட்டார்கள். அந்நிலையில், அவர்களின் உற்ற தோழராகிய சய்யிதினா அபூபக்ர் அஸ்-ஸித்தீக் [ரலி] அவர்கள் மூலம் அவர்களை அல்லாஹ் பாதுகாத்தான்.

ஒரு காலத்தில், அவர்களின்[ஸல்] சொந்த மக்கள் அவர்களை "அஸ்-ஸாதிக்" [உண்மையாளர்], அல்-அமீன் [நம்பிக்கைக்குரியவர்] எனச் சிறப்பாக அழைத்தார்கள். அப்படிப்பட்ட மக்கள் அவர்களை ஒரு பொய்யராகக் கருதத் தொடங்கினர். அம்மக்கள் அவர்களை விட்டும் விலகிச் சென்றனர்; அவர்களைக் கேலி செய்து, அவமதித்தனர்; அவர்களுக்கு எதிராக அவதூறுகளைப் பரப்பி, அவர்களைக் கொல்லவும் முயன்றனர்.

இவற்றைப் பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல், இறைத்தூதர்[ஸல்] அவர்கள் தன்னைச் சூழ்ந்திருந்த **அசிங்கங்களும்** அசுத்தங்களும், தனது மேன்மை, **நற்குணம்** மற்றும் மென்மையான உள்ளத்தைக் களங்கப்படுத்த அனுமதிக்கவில்லை; அவர்கள் அந்தத் துன்பங்களையெல்லாம் **சகித்துக்** கொண்டு, பொறுமையுடன் இருந்தார்கள்; தனது நற்குணத்துடன் உண்மையாகவும் நேர்மையாகவும் திகழ்ந்தார்கள்.

அவர்களின்[ஸல்] அந்த **சகிப்புத் தன்மையானது,** மகத்தானப் பலனைத் தந்தது. ஒரு காலத்தில் அவர்களுடைய எதிரிகளாக இருந்த சிலர், அவர்கள் போதித்த ஓரிறை நம்பிக்கையைப் பரப்புவதற்காக, அவர்களுக்குத் துணையாக நின்று, அவர்களின் பாதுகாவலர்களாக மாறினர்.

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சகிப்புத் தன்மையின்** காரணமாக, இஸ்லாத்தின் ஒளி, மக்கா நகரில் அதன் தொடக்கத்திலும் அணைந்து விடவில்லை; மதீனா நகரை, அலை அலையாகச் **சோதனைகள்** தாக்கிய போதும் அணைந்து விடவில்லை. இறைத்தூதர்[ஸல்] அவர்களின் தூய போதனைகளும், அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்த விழுமியங்களும் அவர்களின் மறைவுடன் முடிந்திடவில்லை. அவை அல்லாஹ்வின் நாட்டப்படி, இடம் மற்றும் காலத்தின் எல்லைகளைக் கடந்து, இன்று இங்கே நம்மை வந்தடைந்து நம்மை முஸ்லிம்களாக ஆக்கியுள்ளன.

முஸ்லிமின் வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் வடிவமைக்கும் ஒவ்வொரு கட்டளையும், தடையுத்தரவும், எதிர்மறையான சூழல்கள் தன்னைச் சீரழிக்க அனுமதிக்க மறுத்த மாமனிதராகிய இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களிடமிருந்தே தோன்றுகிறது. என் சகோதர, சகோதரிகளே! நாம் இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் "உம்மத்" [சமுதாய மக்களாக] இருக்கின்றோம்; நமது நடத்தைகள் அவர்களின் **சகிப்புத் தன்மையையும்** மேன்மையையும் பிரதிபலிப்பதாகவும், ஒவ்வொரு காலத்திலும் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்ப தாகவும் இருக்க வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஃபுஸ்ஸிலத்" எனும் அத்தியாயத்தின் 34-வது வசனத்தில் கூறுகிறான்:

وَلَا تَسْتَوِى ٱلْحَسَنَةُ وَلَا ٱلسَّيِّئَةُ ۚ ٱدْفَعْ بِٱلَّتِى هِىَ أَحْسَنُ فَإِذَا ٱلَّذِى بَيْنَكَ وَبَيْنَهُۥ عَدَٰوَةٌ كَأَنَّهُۥ وَلِىٌّ حَمِيمٌ ﴿٣٤﴾

பொருள்: *"**நன்மையும் தீமையும்** சமமாக மாட்டா, நீங்கள் [தீமையை] நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, யாருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ, அவர் [உங்களின்] உற்ற நண்பரைப் போல் ஆகி விடுவார்"*

நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய **சகிப்புத் தன்மை** இதுதான்; அதாவது, **அசிங்கங்களையும்** அழுக்குகளையும் அதாவது, தீங்குகளையும் சிறந்த செயல்களால் விரட்டியடிப்பதாகும். சகோதர, சகோதரிகளே! இந்த உலகில் தவறுகள் எப்போதுமே இருந்துக் கொண்டிருக்கும்; சில சமயங்களில், நாம் காணுகின்ற அல்லது படிக்கின்ற சில விஷயங்கள் மனிதகுலத்தின் மீதான நமது நம்பிக்கையை இழக்கச் செய்து விடலாம்.

இறைத்தூதர்[ஸல்] அவர்களும் கூட, நாம் தற்போது அனுபவிப்பதை விட மிகவும் மோசமான பல தீமைகளை எதிர்கொண்டு அனுபவித்தார்கள். ஆயினும், அவர்கள் அத்தீமைகளை வென்று, இஸ்லாத்தின் போதனை களையும் விழுமியங்களையும் உலக மக்கள் அனைவருக்கும் விட்டுச் சென்றார்கள்.

எனவே, சகோதர, சகோதரிகளே நினைவில் கொள்ளுங்கள்! பல சவால்களை நாம் எதிர்கொள்பவர்களாகவும் சுமப்பவர்களாகவும் இருந்தாலும், **நன்மை** செய்வதையே தொடர்ந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்; நன்மைகள் செய்வதை ஒருபோதும் கைவிட்டு விடாதீர்கள். நாம் செய்யும் நன்மைகள்

வளர்ந்து கொண்டே சென்று, இறுதியில் பலனளித்து, ஒரு **வலிமையான,** சிறந்த சமூகத்தை உருவாக்கும் என நம்புங்கள்.

ஒவ்வொரு **அசிங்கத்தையும்**, **தீமைகளையும்** ஞானம், ஓரிறை நம்பிக்கை மற்றும் **நற்காரியங்களுடன்** எதிர்கொள்ளும் **வலிமையை** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்கு வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

<u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

சமீபத்தில், நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவில், சுமாம் 93,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அம்மக்களுக்கு உதவும் வகையில், ரஹ்மதன் லில் ஆலமீன் அறக்கட்டளை (RLAF) 50,000 டாலர்கள் பங்களிப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்டும் முயற்சியையும் தொடங்கியுள்ளது.

2026 செப்டம்பர் 7 முதல் 14 வரை பள்ளிவாசல்களில் நேரடியாகவோ அல்லது பிரச்சார சுவரொட்டியில் காட்டப்பட்டுள்ள QR குறியீடு வழியாகவோ, ஆன்-லைனிலோ நன்கொடைகளை வழங்கலாம். பெறப்படும் ஒவ்வொரு நன்கொடையும் சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தேவையுள்ளோருக்கு, இன்ஷாஅல்லாஹ் வழங்கப்படும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது சக மனிதர்களின் கஷ்டங்களைப் போக்கி, நம் ஒவ்வொருவரின் காரியங்களையும் எளிதாக்குவானாக என்று பிரார்த்தித்தவாறு நமது சக்திக்கு ஏற்ப பங்களிப்பைச் செய்வோமாக!

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ

ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ. فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.